பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை-6

ந.க.எண். 001737 /பிடி1/இ2 / 2022, நாள். .02.2022

பொருள்: பயிற்சி- தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்- கற்றல் விளைவுகள் பயிற்சி தற்காலிகமாக ஒத்தி வைத்தல் - சார்பு

பார்வை: பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்001737/பிடி1/இ2 / 2022 நாள். 06.01.2022

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகளின்படி, தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் கற்றல் அடைவுகள் சார்ந்த வலுவூட்டல் பயிற்சி 10.01.2022 முதல் வட்டாரத் தலைமையிடத்தில் தெரிவு செய்யப்பட்ட உயர்நிலைப்பள்ளியில் அமைந்துள்ள உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் (Hi-Tech Lab) நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி இணைய வழியாக வழங்கப்படவுள்ளது. எனவே, 03.02.2022 முதல் நடைபெற உள்ள கற்றல் அடைவுகள் சார்ந்த வலுவூட்டல் பயிற்சியினை தற்காலிகமாக ஒத்திவைக்குமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. பயிற்சி நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1/2/22

பள்ளிக் கல்வி ஆணையர்

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர்கள்

நகல்:

1. மாநிலத்திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி
2. இயக்குநர், தொடக்கல்வி இயக்ககம்
3. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்